

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் வீதி வீதியாக டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதரவம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமையில் கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., முன்னிலையில், 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார். இதில் மார்க்சிஸ்ட் ஜெயராமன் எம்.சி., விடுதலைச் சிறுத்தைகள் ஜான் அலெக்சாண்டர், மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வீ.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறித்து சி.முனுசாமி, கவி.சதிஷ்குமார், கேபிள் டி.வி.எம்.ராஜா, ஏகா.கார்த்திகேயன், ஆர்.சுந்தர் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### காவனூரில் மக்களுடன் முதல்வர் முகாம்!

# ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்!

திருவள்ளூர், ஜுலை 19-

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நத்தமேடு, பாக்கம், சிவன் வாயல், மேலகொண்டை யார் ஆகிய ஊராட்சிக ளுக்கு மக்களுடன் முதல்வர் முகாம் காவனூ ரில் நடைபெற்றது. முகா மிற்கு வட்டாட்சியர் செ.வாசுதேவன், ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், ஒன்றிய திமுக செயலாளர் சே.பிரேம் ஆனந்த், ஒன் றிய குழு துணைத் தலை வர் பர்க்கதுல்லாகான், பொதுக்குழு உறுப்பினர் ஜி.விமல்வர்ஷன், வட் டார வளர்ச்சி அலுவலர் கள் எம்.ஜி.குணசேகரன், கே.ரவி ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

முகாமிற்கு பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆ. கிருஷ்ணசாமி தலைமை தாங்கி மக்களுடன் முதல் வர் திட்டத்தை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டு மனுக் களை பெற்றார்.

இதில் மண்டல துணை வட்டாட்சியர் சந்திரசே கர் வருவாய் ஆய்வாளர் கள் மகேஷ, பொன்மலர், திமுக ஒன்றிய துணை செய லாளர்கள் ஞா. ரமேஷ், மு.ராஜா, மகேஸ்வரி பாலவிநாயகம், ஒன்றிய கவுன்சிலர்கள் வ.அரி, சங் கீதாராஜி, கு.கருணாகரன், ஆர்.ராஜி, பி.ராமானுஜம், சீனிவாசன், மோகன், பார்த்திபன், அருணகிரி, கார்த்திக், ஏழுமலை, சிவன்வாயில் மோகன், அன்பு, நாகராஜ், மணிவண் ணன் திருமலை, ராஜசே கர், சரவணன், அஜீத் மற் றும் துறை சார்ந்த அதிகாரி கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்களின் இந்த கோரிக்கைகள் மீதான விசாரணை மேற்கொண்டு விரைவில் உரிய நடவ டிக்கை எடுக்கப்படும் என பூந்தமல்லி தொகுதி எம் எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.




பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சியில் உள்ள தனியார் பள்ளியில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று நிவர்த்தி செய்யும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச. அருண் ராஜ் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி துணை ஆட்சியர் சாகிதா பர்வீன் கலந்துகொண்டு முகாமை தொடக்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, மகளிர் உரிமைத் தொகை, பட்டா பெயர் மாற்றம் மற்றும் புதிதாக வழங்குதல், குடிநீர் திட்டம் மற்றும் தெரு மின் விளக்குகள், மாற்றுத் திறனாளி உதவித்தொகை, கலைஞர் கனவு இல்லத் திட்டம், புதிய ரேஷன் கார்டு மற்றும் பெயர் மாற்றம் சேர்த்தல், நீக்கல், நெடுஞ்சாலை திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உள்ள குறைகளைக் கேட்டறிந்து கோரிக்கை மனுக்களை பெற்றார்கள் உடன் உதவி திட்ட அலுவலர் சரவணன், மாவட்ட கவுன்சிலர் மனோகர், ஊராட்சி மன்ற தலைவர் ப.வனஜாதயாளன், துணைத் தலைவர் வி.ஜோசப், வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### 2024 - 2025 ஆம் கல்வியாண்டில்

# சென்னை பள்ளி மாணவர்கள் சுற்றுலா செல்லும் வாகனங்கள்!

## மேயர் பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜுலை 19-

சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிவிப்பின் படி, 2024-25ஆம் கல்வி யாண்டில் சென்னை பள் ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர் கள் கல்விச்சுற்றுலா செல் லும் வாகனங்களை மேயர் ஆர். பிரியா நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேயர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு நிதி நிலை அறிவிப்பின்படி, 2024-25ஆம் கல்வியாண் டில் சென்னை பள்ளிக ளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர் கள் கல்விச்சுற்றுலா செல் லும் வாகனங்களை மேயர் ஆர். பிரியா நேற்று (18.07.2024) ரிப்பன் கட் டட வளாகத்தில் கொடிய சைத்து தொடங்கி வைத் தார்.

சென்னை பள்ளி மாண வர்களின் கற்றல் திறனை ஊக்குவித்து மேம்படுத் தும் விதமாக 2024-25ஆம் கல்வியாண்டில் 208 சென்னை தொடக்கப் பள் ளிகள் மற்றும் 130 நடுநி லைப் பள்ளிகளில் 4 மற் றும் 5ஆம் வகுப்பு பயிலும் 24,700 மாணவர்களை கல் விச் சுற்றுலாவாக சென் னையைச் சுற்றியுள்ள கிண்டி சிறுவர் பூங்கா, பிர்லா கோளரங்கம், நூற் றாண்டு நூலகம், எழும்பூர் அருங்காட்சியகம், வண்ட லூர் உயிரியல் பூங்கா ஆகிய இடங்களுக்கு கல் விச் சுற்றுலா அழைத்துச் செல்ல ரூ.47.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது என 2024-25ஆம் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சென்னை பள்ளிகளில் 208 தொடக்கப் பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயி லும் 16,366 மாணவர்கள் ஜுலை 2024 இரண்டா வது வாரம் முதல் டிசம்பர் 2024 வரை கல்விச் சுற் றுலா அழைத்துச் செல்லப் பட உள்ளனர்.

மேலும், இச்சுற்றுலா வானது திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1) தொடங்கி வாரந்தோறும் மண்டலம் வாரியாக பெருநகர சென்னை மாந கராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் உள்ள சென்னை தொடக்கப் பள் ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர் களை ஒரு பேருந்துக்கு சுமார் 55 மாணவர்கள் வீதம், பள்ளிகளில் பயி லும் மாணவர்களின் எண் ணிக்கைக்கு ஏற்ப, தமிழ் நாடு அரசின் மாநகர போக்குவரத்துக் கழகம் மூலமாக முதற்கட்டமாக ரூ.31.29 இலட்சம் மதிப் பில் 298 பேருந்துகள் நிர் ணயம் செய்யப்பட்டுள் ளது.

முதற்கட்டமாக அழைத்துச் செல்லப்படும் இந்தக்கல்விச்சுற்றுலாவில் பட்டேல் நகர், ஹரிநாரா யணபுரம் மற்றும் ஒல்க் ஏரியா சென்னை தொடக் கப்பள்ளிகளைச் சார்ந்த 275 மாணவர்கள், ஆரத் தூன் சாலை-சென்னை தொடக்கப் பள்ளியைச் சார்ந்த 50 மாணவர்கள், கப்பல் போலு தெரு-சென்னை தொடக்கப்பள் ளியைச் சார்ந்த 100 மாண வர்கள், எம்.எம். 6வது லேன்-சென்னை தொடக் கப்பள்ளி மற்றும் வண் ணாரப்பேட்டை-சென்னை உருது ஆண்கள் தொடக்கப்பள்ளியைச் சார்ந்த 55 மாணவர்கள், அம்மையம்மாள் தெரு-சென்னை தொடக்கப்பள் ளியைச் சார்ந்த 150 மாண வர்கள், கூக்ஸ் சாலை-சென்னை தொடக் கப்பள்ளியைச் சார்ந்த 100 மாணவர்கள், எண்ணூர் குப்பம் மற்றும் முகத்துவாரக் குப்பம் சென்னை தொடக்கப் பள் ளிகளைச் சார்ந்த 50 மாண வர்கள், தாழங்குப்பம் மற் றும் காமராஜ் நகர் சென்னை தொடக்கப் பள் ளிகளைச் சார்ந்த 110 மாணவர்கள், அன்னை சிவகாமி நகர் சென்னை தொடக்கப் பள்ளியைச் சார்ந்த 110 மாணவர்கள், புதிய நப்பாலயம் மற்றும் பழைய நப்பாலயம் சென்னை தொடக்கப் பள் ளிகளைச் சார்ந்த 55 மாண வர்கள், மணலி புதிய டவுன் சென்னை தொடக் கப் பள்ளியைச் சார்ந்த 200 மாணவர்கள் என மொத்தம் 18 சென்னை தொடக்கப் பள்ளிகளைச் சார்ந்த 1255 மாணவர்கள் மற்றும் ஒரு பேருந்திற்கு 4 ஆசிரியர்கள் என 24 பேருந்துகளில் கல்விச் சுற் றுலா அழைத்துச் செல்லப் பட்டனர்.

இந்தக் கல்விச் சுற்றுலா வானது, சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர்கள் மூலமாக பள்ளித் தலை மையாசிரியர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, பாதுகாப் பாக தமிழ்நாடு அரசின் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளின் மூலமாக சென்னை மற் றும் அதனைச் சுற்றியுள்ள சென்னை சிறுவர் பூங்கா, பிர்லா கோளரங்கம், அண்ணா நூற்றாண்டு நூலகம், சிக்னல் பார்க், காவலர் அருங்காட்சியகம் (போலீஸ் மியூசியம்), வண்டலூர் உயிரியல் பூங்கா, பெரம்பூர் இரயில் அருங்காட்சியகம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படு வர்.

இந்தக் கல்விச் சுற்றுலா மூலம் மாணவர்களுக்கு கல்வி மற்றும் பொது அறிவு சிந்தனையுடன் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் உருவாக்கப்படும். இந்த தொடக்கப்பள்ளி மாணவர்களின் கல்விச் சுற்றுலாவானது டிசம்பர் 2024 கடைசி வாரத்தில் முடிவடையும்.

இதனைத் தொடர்ந்து, மீதமுள்ள நடுநிலைப்பள் ளிகளில் பயிலும் 4 மற்றும் 5ஆம் வகுப்பு மாணவர்க ளுக்கும் அடுத்தக் கல்வி யாண்டில் கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்வது தொடரும்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, நிலைக்குழுத் தலை வர்கள் பாலவாக்கம் த. விசுவநாதன் (கல்வி), டாக் டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), கல்வி அலுவலர் திருமதி வசந்தி, உதவி கல்வி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பஞ்சாப் மாநில அரசின் மசோதாவை திருப்பி அனுப்பினார் குடியரசுத் தலைவர்!

### பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பிலிருந்து ஆளுநரை நீக்கும்

## சட்டப்பேரவையில் மீண்டும் மசோதாவை தாக்கல் செய்ய அரசு திட்டம்!

சண்டிகர், ஜுலை 19-

பஞ்சாப் பல்கலைக் கழ கங்களின் வேந்தர் பொறுப் பிலிருந்து ஆளுநரை நீக்கும் மசோதாவை குடியரசு தலைவர் திருப்பி அனுப்பி யுள்ள நிலையில், அதனை மீண்டும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதா? அல்லது உச்சநீதிமன்றத்தில் வழக் குத் தொடர்வதா என பஞ் சாப் அரசு தீவிர ஆலோ சனை நடத்தி வருகிறது.

பா.ஜ.க., அல்லாத கட்சி கள் ஆட்சி செய்யும் மாநி லங்களில் பல்கலைக்கழக நியமனங்களில் ஆளுநர்க ளின் தலையீடு அதிகமாக உள்ளது. இதனால் தமிழ் நாடு உட்பட பல மாநிலங் கள் வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநரை நீக்கும் மசோதாவை நிறைவேற்றி யுள்ளன.

பஞ்சாப் மாநிலமும் பல் கலைக்கழக சட்ட திருத்த மசோதாவை கடந்த ஆண்டு நிறைவேற்றியது. அதற்கு நீண்ட நாளாக ஆளுநர் ஒப்புதல் வழங்கா தால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆளுநர்கள் எந்த மசோதா வையும் காரணமில்லாமல் நீண்ட நாட்கள் கிடப்பில் வைத்திருக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு தீர்ப்பு வழங் கியது.

இதனை தொடர்ந்து டிசம்பர் மாதம் பஞ்சாப் மாநில மசோதாவை அம் மாநில ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்தார்.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் அந்த மசோதா வுக்கு ஒப்புதல் வழங்காமல் தற்போது ஆளுநருக்கு திருப்பி அனுப்பி உள்ளார். ஆளுநர் அதனை அரசுக்கு திருப்பி அனுப்பி உள்ளார்.

இதனால் மீண்டும் மசோ தாவை சட்டமன்றத்தில் நிறைவேற்றுவதா? அல்லது உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதா என்பது குறித்து பஞ்சாப் ஆம் ஆத்மி அரசு தீவிர சட்ட ஆலோ சனை நடத்தி வருகிறது.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில்

# சைதை 139 அ வட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் நன்றி தெரிவித்தார்!

## எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. - சை.மு.சேகர் - கழகத்தினர் வரவேற்றனர்!

சென்னை, ஜுலை 19 -

சைதை மேற்கு பகுதி 139 அ வட்டத்தில் 16.07.2024. செவ்வாய்க்கி ழமை மாலை 5.30 மணிய ளவில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பி னர். முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் வெற்றி பெற செய்த பொது மக்க ளைச் சந்தித்து நன்றி தெரி விக்க வருகை தந்த, அவ ருக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது, வீதி மாரியம்மன் கோவில் பகுதியிலிருந்து பெருமாள் கோயில் மேற்கு மாட வீதி வரை இருசக்கர வாகனத் தில் நன்றி தெரிவித்தார்.

இதில் 139 அ வட்டத் தைச் சார்ந்த கழகத்தினர் அனைவருக்கும் கலந்து கொண்டனர். மாலை 5.30மணியளவில் வீதி மாரியம்மன் கோவில் தெரு கங்கையம்மன் கோயில் சந்திப்பில் வந்த அமைச்சர் மா.சுப்பிர மணியன், முனைவர். தமி ழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோருக்கு பகுதி செயலாளர். எம். கிருஷ்ணமூர்த்தி, வட்டச் செயலாளர் சை.மு.சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகி கள் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

மாவட்ட கலை இலக்கி யப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர். எம்.எஸ்.ஹரிபாபு, வட் டக்கிளை நிர்வாகிகள் இ. வரதன், மா.ஏழுமலை, பூபதி.வெங்கடேசன், ஜி.ஏழுமலை ஜிம்.க.பிரபு, துளசி சந்திரசேகர், எஸ். சரத்குமார், இ. ஸ்ரீதர், எம்.சதீஷ், எம்.பிரசாத், ஆர்.விஜயா ஆகியோரும் அப்பாதுரை தெருவில் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர். என்.தீனதயாளன், வட்ட துணை செயலாளர். சுமதி தீனதயாளன், உதயசூரி யன், மதிமுக பகுதி செய லாளர். எஸ்.வி.குமார், பாண்டியன், பிடிசி.பா. வெங்கட் ராமன் குடும்பத் தினர், சாரதி நகர் பகுதி யில் பகுதி பிரதிநிதி. யமஹா.ராஜேஷ், ப.து.அ. மு.காத்தவராயன், எஸ். சையத்ஜலால் ஜானி, இளைஞர் அணி அமைப் பாளர்.ஜி.ரஞ்சித், து.மா. பொ.சி, என் .எஸ்.கார்த் திக், உ.மகேஷ்,டி.பிரவீன், ஜி.வெற்றிவேல், டி.எம். அமீன், அ.சீனிவாசன் ஆகியோரும் வரவேற்ப ளித்தனர்.

மேற்கு ஜோன்ஸ் சாலையில், பகுதி பிரதி நிதி. கொடி.து.சுரேஷ்பாபு தலைமையில் ஆர்.தாமோ தரன், மு.மூர்த்தி, மூ. வினோத் கண்ணா, போட்டோ.ரவி, எஸ்.சக் திவேல், மூ.கௌதம், எம். தேவி,செல்வம், த.சேகர், எஸ்.சந்தானம், பலராமன், கொடி.கே.பாரி குடும்பத் தினரும் . வி.எஸ்.முதலி. தோட்டத்தெருவில் உள்ள வட்டக்கிளை அலுவலகத் தில் கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என். ரமேஷ், எஸ் கண்ணன், வி.ஆதிகேசவன், பி.ராம தாஸ், கா.மூர்த்தி, ஆர். கண்ணன், ப.மோகன், ஜோ.அந்தோணி, போட்டோ.ரவி,கே.பூபதி, கே.கோபாலகிருஷ்ணன், ஜெ. விஜயகுமார், ஜெ. கார்த்திக், ஏ.எம்.சேகர், பி.ஏகாம்பரம் ஆகியோ ரும் சேகர் நகர்.செல்வ வினாயகர் கோயில் தெரு வில் ஆர்.கன்னியப்பன், எஸ்.ராஜேந்திரன், ராஜாம் பாள் தெருவில் மாவட்ட இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைத் தலை வர். வெ.புருசோத்தமன்,

வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர். சேகர்.ஆர்.ஞானவேலு, கே.ரத்தினசபாபதி, ஜி.தங் கராஜ், மகளிர் அணி உமா மகேஸ்வரி, எஸ்.கார்த்திக், வி.சந்திரசேகர், மா.கோவிந்தசாமி ஆகி யோரும் நடராஜன் தெரு வில் பகுதி அமைப்பாளர். பூ.பாஸ்கர், எஸ்.விஜயா, ஜெ.தமிழ்ச்செல்வன், ஜி.சீனிவாசன், சி.மதியழ கன், கே.வேலாயுதம்,கமல் ஆகியோரும் வரவேற்ற னர். நியு காலனி பிரதான சாலையில் பகுதி பிரதிநிதி. டி.கோபாலகிருஷ்ணன், துணை அமைப்பாளர். வி.வெங்கடேசன் பெரு மாள் கோயில் விரிவு தெரு வில் பகுதி அமைப்பாளர் சார்ப்.சரவணன், டைல். ராதாகிருஷ்ணன், து.வடி வேலன், பிடிசி.வெங்கடே சன், கே.வெங்கடேசன் ஆகியோரும் சால்வை அணிவித்தும் ஆரத்தி எடுத் தும் பட்டாசு வெடித்தும் வரவேற்றனர். நிகழ்ச்சி யில் களக்காடி எல்லப் பன், வி.பி.ஜானகிராமன், ப.சுப்பிரமணி.எம்.சி, தக் கோலம்.தேவபாலன், ஆர். கிருஷ்ணகுமார் சைதை.த.மணி, மற்றும் பலர் பங்கேற்றனர்.

# நீலகிரியில் இன்று அதிகனமழை!

சென்னை, ஜுலை 19 -

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட் டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நீலகிரி மாவட்டத்துக்கு அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டு ள்ளது. நீலகிரியில் ஒரு சில பகுதிகளில் மிக கனமழை முதல் அதிகனமழை பெய் யும்.

திருப்பூர், தேனி, திண் டுக்கல், தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி யில் இன்று கனமழைக் கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கோவையில் கனமழை முதல் மிக கனமழை பெய் வதற்கான ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரியில் இன்று மிக கனமழை பெய்வதற்கான ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 4 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்யும்.

தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை காரைக்காலிலும் 24ந்தேதி வரை லேசானது முதல் மித மான மழைக்கு வாய்ப்பு உள்ளது.

சென்னையில் 48 மணி நேரத்திற்கு நகரின் ஒருசில இடங்களில் இடி, மின்ன லுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது.

சென்னையில் 48 மணி நேரத்திற்கு வானம் மேக மூட்டத்துடன் காணப்ப டும். அதிகபட்ச வெப்பநி லையாக 35 டிகிரி செல்சி யஸ் பதிவாகும்.

தென் தமிழக கடலோ ரம், குமரிக்கடல், மத்திய, தென் வங்கக்கடலில் 22 ந்தேதி வரை அதிகபட்ச மாக 65 கி.மீ. வரை காற்று வீசும்.

காற்று வீசும் பகுதிகளில் 22ந்தேதி வரை மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட ராஜாஜி சாலை பகுதியில் உள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.கே. பாபு ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் ஆகியோர் காமராஜர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச நோட் புத்தகங்களை வழங்கினார்கள் உடன் முன்னாள் நகர் மன்ற தலைவர் பொன்.பாண்டியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம. கிரண், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், தி.ஆர். திலீபன், தலைமை ஆசிரியர் முரளி, தலைமை துணை ஆசிரியர் லட்சுமி நகர்மன்றத் துணைச் செயலாளர் டி.எம்.ரவி மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சாந்தகுமார், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சித்திக் உள்பட பலர் உள்ளனர்.

### சென்னை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்

# எஸ்.எஸ்.சுப்பிரமணி மனைவி சாந்தி முதலாம் ஆண்டு நினைவு நாள் படத்திறப்பு!

## ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு!

சென்னை ஜுலை 19-

சென்னை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எஸ்.எஸ்.சுப்பிரமணி துணைவியார் எஸ்.சாந்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் மற் றும் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை (20.07.2024 சனிக்கி ழமை) மாலை 7.00 மணிய ளவில் திருநாவுக்கரசு தோட்டம் முதல் தெரு வில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப் பாளர் ஆர்.டி.சேகர் எம். எல்.ஏ, சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ,ஆர். கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெப தாஸ் பாண்டியன், 47வது வார்டு மாமன்ற உறுப்பி னர் மணிமேகலை,47வது வட்ட செயலாளர் ஜி.ஏழு மலை மற்றும் 47வது வட்ட நிர்வாகிகள் அணிக ளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு படத்திறப்பு நிகழ்ச்சியை சிறப்பிக் கின்றனர்.



வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, இராயபுரம் வடக்குப் பகுதியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். இதில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில் குமார் வட்டச் செயலாளர்கள், இரா.பாலன் எம்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பா.லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், பகுதி நிர்வாகிகள் எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.